THE HINDU PHILOSOPHY OF LIFE, ETHICS AND RELIGION.

261

ஓம் தத் ஸத்

ஸ்ரீமத்பகவத்கீதாரஹஸ்யம்

அல்லது

கர்மயோகசாஸ்திரம்.

பாகம் க.

இந் நூல்

லோகமான்ய

ஸ்ரீ பால கங்காதர திலகரால்

மஹாராஷ்டிரபாஷையில் இயற்றப்பட்டு

தஞ்சாவூர்

ராமசந்திர பாவுஸ்வாமி கோஸ்வாமி B.A.,

பண்டித S. சுப்பிரமணிய சாஸ்திரி

என்பவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

ஸ்ரீரங்கம்:

ஸ்ரீ வாணீ விலாஸ அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

௧௯௨௪.

விஷய அநுக்கிரமணிகை.

பக்கம்.

பிரகரணம் ஒன்றாவது—விஷயப்பிரவேசம்.

ஸ்ரீமத் பகவத் கீதையினது யோக்கியதை—கீதையின் அத்தியாயசமாப்தியைக் குறிக்கும் சங்கற்பம்—கீதையென்னும் சொல்லின் பொருள்—வேறு பல கீதைகளின் வர்ணனமும், அவற்றினுக்கும் யோகவாஸிஷ்டம் முதலியவற்றிற்குமுள்ள கௌணத்தன்மையும்—கிரந்தபரீக்ஷை செய்யும் பிரகாரங்கள்—பகவத்கீதைபற்றிய பிற்காலத்து பகிரங்கபரிக்ஷை—மகாபாரதகாரர் கூறிய கீதாதாற்பரியம்—பிரஸ்தானத்திரயமும் அதன்மீதுள்ள சாம்பிரதாயிகபாஷ்யங்களும்—அவற்றினைய னுசரித்த கீதாதாற்பரியங்கள்—ஸ்ரீ சங்கராசாரியர்—மதுஸூதனர்—தத்துவமஸி—பைசாசபாஷ்யம்—ராமாநுஜாசாரியர்—மத்துவாசாரியர்—வல்லபாசாரியர்—நிம்பார்க்கர்—ஸ்ரீதாஸ்வாமி—ஞானேசுவரர்—எல்லாரது திருஷ்டியும் சாம்பிரதாயிகம்—சாம்பிரதாயிகதிருஷ்டியை விடுத்து கிரந்ததாற்பரியத்தை எடுக்கும் விதம்—சாம்பிரதாயிகதிருஷ்டியில் அதன் உபேக்ஷை—கீதையின் உபக்கிரம உபசங்காரங்கள்—பரஸ்பரவிரோதமுற்ற நீதிதருமங்களின் குழப்பமும் அதன்கண் உண்டாகும் கர்த்தவிய தருமமோகமும்—அதனை நிவிருத்தி செய்வதற்கான கீதோபதேசம். ப. ௧—௩௭.

[illegible]ணம் இரண்டாவது—கர்மஜிஜ்ஞாஸை.

கர்த்தவியமூடத்தனம்பற்றிய இரண்டு ஆங்கில உதாரணங்கள்—[illegible]ந்த திருஷ்டியில் மகாபாரதத்திய மகத்துவம்—அஹிம்ஸா தருமமும் அதனுக்கு அபவாதங்களும்—க்ஷமையும் க்ஷமைக்கு அபவாதங்களும்—நமது சாஸ்திரத்திற்கண்ட ஸத்திய அநிருத [illegible]வகம்—ஆங்கில நீதிசாஸ்திரங்களிலுள்ள விவேகத்தோடு [illegible]னை ஒத்துப்பார்த்தல்—நம் சாஸ்திரகாரரது திருஷ்டியின் [illegible]ரஷ்டத்துவமும் மகத்துவமும்—பிரதிஜ்ஞாபாலனமும்

அதன்வரம்பும்—களவாடாமையும் அதற்கு அபவாதங்களும்—'இறத்தலினும் உயிர்த்திருப்பது சிரேயஸ்கரமாம்' என்பதற்கு அபவாதங்கள்—ஆத்மஸம்ரக்ஷணம்—தாய் தந்தை குருமுதலிய பூஜிக்கத்தக்க புருஷர்களுக்குக் கர்த்தவியங்களும் அவற்றிற்கு அபவாதங்களும்—காமம் குரோதம் லோபம் என்னுமிவற்றினது நிக்கிரகத்தின் தாரதமியம்—தைரியம் முதலிய குணங்களின் பிரசங்கமும் தேசகாலாதி வரம்பும்—ஆசாரத்தினது தாரதமியம்—தருமாதருமங்களின் நுட்பமும் கீதையினது அபூர்வத்தன்மையும். ப. ௩அ-

பிரகரணம் மூன்றாவது—கர்மயோகசாஸ்திரம்.

கர்மஜிஜ்ஞாஸையின் மகத்துவமும் கீதையின் முதல் அத்தியாயமும் கர்மயோகசாஸ்திரத்தினது அவசியத்தன்மையும்—கர்மசப்தத்தின் அர்த்தநிர்ணயம்—மீமாம்ஸகர்களது கர்மவகைபாடு—யோகசப்தத்தின் அர்த்தநிர்ணயம்—கீதையிற்கண்டயோகம் =கர்மயோகம் என்பதும் அதுவே பிரதிபாதிக்கப்படுவது என்பதும்—கருமாகருமங்களின் பரியாயச்சொற்கள்—ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் ஆத்தியாத்மிகம் என்னும் சாஸ்திரீயப் பிரதிபாதநத்திய மூன்று மார்க்கங்கள்—இம்மார்க்கங்கள் உண்டாவதற்குக் காரணம்—கோம்ட் என்பவரது கொள்கை—கீதையின் பிரகாரம் அத்தியாத்மதிருஷ்டி சிரேஷ்டமானது—தர்மசப்தத்திய இரண்டு பொருள்கள், பாரலௌகிகமும் வியாவஹாரிகமும்—சாதுர்வர்ணியாதி தருமங்கள—ஜகத்தைத் தரிக்கின்றமையால் தர்மம்—சோதனையிலக்கணமாம் தர்மம்—தருமாதரும நிர்ணயத்திற்கான ஸாமானியநியமங்கள்—'महाजनो येन गतः स पन्थाः' என்பதுவும் ... என்னுள்ள ... களும்—'अति सर्वत्र वर्जयेत्' என்பதுவும் அதன் பூர்த்தியின்மையும்—விரோதமின்றி தர்மநிர்ணயம்—கர்மயோகசாஸ்திரத்தினது செயல். ப. ௬எ-

பிரகரணம் நான்காவது—ஆதிபௌதிகசுகவாதம்.

ஸ்வரூபப்பிரஸ்தாபம்—தர்மாதர்மங்களை நிர்ணயிக்கும் தத்துவங்கள்—சார்வாகனது கேவலஸ்வார்த்தம்—ஹாப்ஸ் என்பவரது தூரதர்சியான ஸ்வார்த்தம்—ஸ்வார்த்த புத்தியைப்போலவே பரோபகாரபுத்தியும் இயற்கையாயுள்ளது—யாஞ்ஞவற்கியரது ஆத்மார்த்தம்—ஸ்வார்த்தபரார்த்த உபயவாதம் அல்லது சதுரமான ஸ்வார்த்தம்—அதன்மீதுள்ள ஆக்ஷேபங்கள்—பரார்

பக்கம்.

த்தப் பிரதானமாயுள்ள பக்ஷம்—பெரும்பான்மையோரது பெரும்பான்மையான சுகம்—அதன்மீதுள்ள ஆக்ஷேபங்கள்—பெரும்பான்மையோரது பெரும்பான்மையான ஹிதத்தை யார் எப்படி நிர்ணயிப்பது—கருமத்தைக்காட்டிலும் கர்த்தாவினது புத்தியின் மகத்துவம்—பரோபகாரம் ஏன் செய்யவேண்டும்—மனுஷ்யஜாதியின் பூர்ணாவஸ்தை—சிரேயஸ்ஸும் பிரேயஸ்ஸும்—சுகதுக்கங்களின் அநித்தியத்தன்மையும் நீதிதருமத்தின் நித்தியத்தன்மையும். ப. கூ௮—கஉ௩

காரணம் ஐந்தாவது—ஸுகதுக்கவிவேகம்.

சுகத்திற்காக ஒவ்வொருவனது பிரவிருத்தியும்—சுகதுக்கங்களின் லக்ஷணங்களும் பேதங்களும்—சுகம சுதந்திரமானதா துக்கமின்மைவடிவினதா—சந்நியாஸமார்க்கத்தினது கொள்கை—அதன் மறுப்பு—கீதையினது சித்தாந்தம்—சுகமும் துக்கமுமாகிய இவை இரண்டு சுதந்திரமான பாவப்பொருள்களாம்—இவ்வுலகில் நன் அடையப்பெறும் சுகதுக்க விபரீதங்கள்—ஸம்ஸாரத்தின்கண் சுகம் அதிகமா துக்கம் அதிகமா—மேல்நாட்டிலுள்ள சுகமிகுதிபற்றியவாதம்—மனிதன் ஆன்மவதை செய்கின்றிலன் என்றமட்டினின்று ஸம்ஸாரத்தினது சுகமயத்துவம் ஸித்தமாகிறதில்லை—சுகஇச்சையினது அடக்கமுடியாத அபிவிருத்தி—சுக இச்சை சுகபோகத்தினால் திருப்தியுறுவது அசக்கியமென்பது—ஆகவே ஸம்ஸாரத்தின்கண்ணுள்ள துக்கத்தின் மிகுதி—அதற்கு அநுகூலமான நம் சாஸ்திரகாரர்களது சித்தாந்தம்—சோபென்ஹௌவர் என்பவரது கொள்கை—ஸந்தோஷமின்மையின் உபயோகம்—அதன் கெட்ட பரிணாமங்களை விலக்குதற்குற்ற உபாயம்—சுகதுக்க அநுபவங்களின் தன்வசப்பாடும் பலாசையினது லக்ஷணமும்—பலாசையின் தியாகத்தினாலேயே துக்க நிவாரணம் ஆகின்றமையால் கர்மத்தியாகத்திய நிஷேதம்—இந்திரிய நிக்கிரகத்தின் வரம்பு—கர்மயோகத்திய சாற்சூத்திரம்—சாரீரகமெனின் ஆதிபௌதிகமான சுகத்தின் பசுதர்மத்துவம்—ஆத்மப்பிரஸாதஜம் எனின் ஆத்தியாத்மிக சுகத்தினது சிரேஷ்டத்துவமும் நித்தியத்துவமும்—இவ்விரண்டு சுகங்களின் ஒற்றுமையே கர்மயோகதிருஷ்டியில் பரமசாத்தியம்—விஷய உபயோகத்தாலாகிய சுகம் அநித்தியமும் பரமசாத்தியமாவதற்கு அயோக்கியமுமென்பது—ஆதிபௌதிக சுகவாதத்தின் பூர்த்தியின்மை. ப. கஉ௪—கக௦.

பிரகரணம் ஆறவது—ஆதிதைவதபக்ஷமும் க்ஷேத்திரக்ஷேத்ரஜ்ஞ விசாரமும்.

மேல்நாட்டு ஸதஸத்விவேக தேவதாபக்ஷம்—அதற்கொபாக மனோதேவதாஸம்பந்தமாய் நம் கிரந்தங்களிலுள்ள வசனங்கள்—ஆதிதைவத பக்ஷத்தின்மீது ஆதி பௌதிகபக்ஷத்திருள்ள ஆக்ஷேபங்கள்—பழக்கமும் அப்பியாஸமுமாகிய இவைகளால் காரியாகாரிய நிர்ணயம் துரிதமாயாகின்றது—ஸதஸத்விவேகமென்பது தனிப்பட்டதோர் சக்தியன்று—அத்யாத்மபக்ஷத்திய ஆக்ஷேபங்கள்—மனிதசரீரத்தினது பெரியதோர் கார்கானா—கர்மேந்திரியங்களும் ஞானேந்திரியங்களுமாகிய இவற்றின் வியாபாரங்கள்—மனதும் புத்தியுமாகிய இவற்றின் தனித்தனியான செயல்கள்—வியவஸாயவடிவும் வாஸனாவடிவுமாகிய புத்திகளுட்கண்ட பேதமும் சம்பந்தமும்—வியவஸாயாத்மகபுத்தி ஒன்றேயாயினும் சாத்துவிக முதலிய பேதங்களால் மூவகைத்து—ஸதஸத்விவேகபுத்தி அதன்கண்ணே வருகின்றது, தனியான்றன்று—க்ஷேத்திரக்ஷேத்ரஜ்ஞ விசாரமும் க்ஷராக்ஷரவிசாரமுமாகிய இவற்றின் சொரூபமும் கர்மயோகத்துடன் சம்பந்தமும்—க்ஷேத்திரசத்தின் பொருள்—க்ஷேத்ரஜ்ஞனாகிய ஆத்மாவினது அஸ்தித்வம்—க்ஷராக்ஷரவிசாரத்தின் பிரஸ்தாவனை. ப. கசுக-

பிரகரணம் ஏழாவது—காபில ஸாங்கியசாஸ்திரம் அல்லது க்ஷராக்ஷர விசாரம்.

க்ஷராக்ஷரவிசாரம் புரியும் சாஸ்திரங்கள்—காணாதரது பரமாணுவாதம்—காபிலஸாங்கியம்—ஸாங்கிய சப்தத்தின் பொருள்—காபிலஸாங்கியத்தின்மீதுள்ள கிரந்தங்கள்—ஸத்கார்யவாதம்—ஜகத்தின் மூலதிரவியம் அல்லது பிரகிருதி ஒன்றே—ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னுமிவை அதன் மூன்று குணங்கள்—முக்குணங்களின் ஸாம்ய நிலைமையும், ஒன்றோடொன்றன் சேர்க்கை பிரிவுகளால் அநேக பதார்த்தங்களின் உற்பத்தியும்—பிரகிருதி அவியக்தமும் அகண்டமும் ஒரே மாதிரியதும் அசேதநமுமாம்—அவியக்தத்தினின்று வியக்தம் —பிரகிருதியினின்றே மனமும் புத்தியும்—ஹேகெல் என்பவரது ஜடாத்வைதமும், பிரகிருதியினின்று ஆத்மாவினது உற்பத்தி ஸாங்கிய சாஸ்திரத்தற்கு ஒப்பத்தக்கதன்றென்பதும்—பிரகிருதியும் புருஷனுமாகிய இவ்விரண்டும் சுதந்திரமாயுள்ள

பக்கம்.

தத்துவங்களாம்—இவற்றுள் புருஷன் அகர்த்தாவும் நிர்குண னும் உதாஸீனனுமாயிருக்க எல்லா கர்த்திருத்துவமும் பிர கிருதியினது—இரண்டனது ஸம்யோகத்தினால் சிருஷ்டி யினது விரிவு—பிரகிருதியும் புருஷனுமாகிய இவற்றினுட் கண்ட பேதத்தை அறிவதனால் கைவல்யம் என்னும் மோக்ஷத் தின் பேறு—மோக்ஷமென்பது யாருக்கு? பிரகிருதிக்கா புருஷனுக்கா?—ஸாங்கியர்களின் எண்ணிறந்ததும் வேதாந்தி களது ஒன்றேயுமான புருஷன்—முக்குணங்களுக்கப்பாற்பட் டவனது நிலைமை—ஸாங்கியர்களதும் அதற்கொப்பான கீதை யினதுமான சித்தாந்தங்களுட்கண்டபேதம். ப. ௧௧௯—௨௨௨.

காரணம் எட்டாவது—உலகத்தின் தோற்றமும் ஒடுக்கமும்.

பிரகிருதியின் பரப்பு—ஞானவிஜ்ஞானலக்ஷணம்—பற்பல சிருஷ்டி உற்பத்திக் கிரமங்களும் அவற்றின் கடைசியதான ஏகவாக்கியதையும்—பிற்காலத்திய உத்கிராந்திவாதத்தின் சொரூபமும் ஸாங்கியர்களது குணோத்கர்ஷ தத்துவத்தோடு ள்ள அதன் ஒப்புமையும்—குணோத்கர்ஷத்தின் அல்லது குண பரிணாமவாதத்தின் நிரூபணம்—பிரகிருதியினின்று முதற் கண் வியவஸாயாத்மக புத்தியினதும் பிற்பட்டு அஹங்காரத் தினதுமான உற்பத்தி—அவற்றின் மும்மூன்றுமடங்கேற்ற அந்தமான பேதங்கள்—அஹங்காரத்தினின்று பின்னிட்டு லேந்திரிய சிருஷ்டியிலுள்ள மனதோடுகூடப் பதினொன்றும் நிரிந்திரிய சிருஷ்டியிலுள்ள தன்மாத்திர வடிவமான ஐந்து த்துவங்களுமாகிய இவற்றின் உற்பத்தி—தன்மாத்திரங்கள் ஐந்தேதாமேனே ஸூக்ஷ்ம இந்திரியங்கள் பதினொன்றே ாமேனே என்பதற்குக் காரணம்—ஸூக்ஷ்ம சிருஷ்டியி ரின்று ஸ்தூலவிசேஷம்—இருபத்தைந்து தத்துவங்களுள்ள ரம்மாண்ட விருக்ஷம்—அநுகீதையிற்கண்ட பிரம்ம விருக்ஷ ம் கீதையிற்கண்ட அசுவத்த விருக்ஷமும்—இருபத்தைந்து த்துவங்களாக வகைப்படுத்துவதில் ஸாங்கியமும் வேதாந்தமு ாகிய இவற்றின் வேறுபட்ட மாதிரிகள்—அவற்றின் கோஷ் டகம்—ஸ்தூலபஞ்ச மகா பூதங்களினது உற்பத்தியைப்பற்றி வதாந்தகிரந்தங்களில் வருணிக்கப்பட்டுள்ள கிரமம்—பின் ரிட்டு பஞ்சீகரணத்தினால் ஆகிய எல்லா ஸ்தூலபதார்த்தங் ளும்—உபநிஷத்துக்களிலுள்ள திரிவிருத்காணத்துடன் கனை ஒத்துப்பார்த்தல்—ஸஜீவசிருஷ்டியும் லிங்க சரீரமும் —வதாந்தத்திய லிங்கசரீரமும் ஸாங்கியரது லிங்கசரீரமு

மாகிய இவற்றின்கண்ணுள்ள பேதம்—புத்தியின் பாவங்க
வேதாந்தத்திற்கண்ட கருமமும்—பிரளயம்—உற்பத்தி
ளய காலம்—கற்பயுகமாநம்—பிரம்மதேவருடைய பகலி
களும் அவரது மொத்த ஆயுளும்—இதர சிருஷ்டியுற்பத்
கிரமத்திற்கு விரோதமும் ஏகவாக்கியதையும். ப. உஉ

பிரகரணம் ஒன்பதாவது—அத்தியாத்மம்.

பிரகிருதியும் புருஷனுமென்னும் துவைதத்தின் மீது
ஆக்ஷேபங்கள்—இரண்டனுக்குமப்பாற்பட்டதனை விசா
செய்யும் முறைமை—இரண்டனுக்குமப்பாற்பட்டது ஒ
பரமாத்மா அல்லது பரமபுருஷன்—பிரகிருதி (ஜகத்து),
ஷன் (ஜீவன்), பரமேசுவரன் என்னும் மும்மை—கீதை
கண் வர்ணித்துள்ள பரமேசுவரஸ்வரூபம்—வியக்த—அ
லது ஸகுண-ரூபமும் அதன் கௌணத்தன்மையும்—அவிய
மாயினும் மாயையினால் வியக்தமாகின்றது—அவியக்த
னுடையவே ஸகுணம், நிர்குணம், ஸகுணநிர்குணம் என்
மூன்று வகைகள்—அதற்கேற்ற உபநிஷத்துக்களிலுள்ள
ணனங்கள்—உபநிஷத்துக்களில் உபாஸனைக்காகக் கூ
பட்டுள்ள வித்தைகளும் பிரதீகங்களும்—மூவகைப்பட
அவியக்த ரூபங்களுள் நிர்குணமே சிரேஷ்டமானது
உஅஉ)—மேற்கூறிய சித்தாந்தங்களின் சாஸ்திரீய உபபத்தி
நிர்குணமும் ஸகுணமு மென்னுமிவற்றின் ஆழ்ந்த பொரு
—அமிருதத்துவம்பற்றிய இயற்கையாயமைந்த கற்பனை
சிருஷ்டிஜ்ஞாநம் எப்படி எதனுடையதாகின்றது—ஞா ந
கிரியையினது வருணனமும் நாமரூபங்களின் வியாக்கியா
மும்—நாமரூபங்களின் காட்சியும் வஸ்துதத்துவமும்—
தியத்தின் வியாக்கியானம்—நாமரூபங்கள் விநாசியாதலா
அஸத்தியங்கள், வஸ்துதத்துவம் நித்தியமாதலால் ஸத்தியம்
வஸ்துதத்துவமே அக்ஷர பிரம்மமும் நாமரூபங்களே மாயை
மாம்—ஸத்தியம் மித்தியை என்னும் சொற்களுக்கு வேத
த்திற்கண்ட பொருள்—ஆதிபௌதிக சாஸ்திரங்களது நா
ரூப வடிவத்தன்மை (ப. உகக)—விஜ்ஞாநவாதம் வேதாந்த
திற்கு ஏற்கத்தக்கதன்று—மாயாவாதத்தினது புராதன
தன்மை—நாமரூபங்களால் மூடப்பட்டுள்ள நித்திய பிரம்
தினுடையவும் சாரீர ஆத்மாவினுடையவும் ஸ்வரூபம் ஒன்
—இரண்டினையும் சித்ரூபியென்று ஏன் கூறுகின்றனர்

பக்கம்.

பிரம்மாத்மைக்கியம் எனின் 'பிண்டத்திலுள்ளது பிரம்மாண்டத்தில்' என்பது—பிரம்மாநந்தம்—அஹம்பாவத்தினது மரணம்—துரீயநிலை அல்லது நிர்விகற்பஸமாதி—அமிருதத்துவத்தின் வரம்பும் மரணத்தின் மரணமும் (ப. ௩கச)—துவைதவாதத்தினது உற்பத்தி—கீதையும் உபநிஷத்துக்களுமாகிய இவ்விரண்டும் அத்துவித வேதாந்தத்தையே பிரதிபாதிக்கின்றன—நிர்குணத்தின்கண் ஸகுண மாயையினது உற்பத்தி எவ்விதமாகின்றது—விவர்த்தவாதமும் குணபரிணாமவாதமும்—ஜகத்தையும் ஜீவனையும் பரமேசுவரனையும் பற்றிய அத்தியாத்ம சாஸ்திரத்தின் சுருக்கமான சித்தாந்தங்கள் (ப. ௩உக)—பிரம்மத்தின் ஸத்திய அநிருதத்தன்மை—ஓம் தத் ஸத் என்பதும் பிறிதுமான பிரம்மநிர்தேசங்கள்—ஜீவன் பரமேசுவரனது அம்சம் என்பது எப்படி—பரமேசுவரன் திக்கு காலங்களினால் வரம்பின்றியவர் (ப. ௩௩ச)—அத்தியாத்ம சாஸ்திரத்தின் கடைசியதான சித்தாந்தம்—தேஹேந்திரியங்களின்கண் மூறிந்துபோன ஸாம்யபுத்தி—மோக்ஷஸ்வரூபமும் ஸித்தாவஸ்தையின் வர்ணனமும் (ப. ௩௩௬)—இருக்வேதத்திலுள்ள நாஸதீயஸூக்தத்தின் பொருளுடன் விவரணம்—முன்பின் பிரகரண ஸங்கதி. ப. உ௬க—௩௫க.

பிரகரணம் பத்தாவது—கர்மவிபாகமும் ஆத்மசுதந்திரமும்.

மாயா சிருஷ்டியும் பிரம்ம சிருஷ்டியும்—தேஹத்தின் கோசங்களும் கருமாசிரயமான லிங்கசரீரமும்—கருமம் நாமரூபங்கள் மாயை என்னுமிவற்றின் பரஸ்பரஸம்பந்தம்—கருமத்தினதும் மாயையினதுமான வியாக்கியானம்—மாயையின் மூலம் அகம்யமாதலின் மாயை பரதந்திரமாயிருப்பினும் அநாதியாயுள்ளது—மாயாவடிவமான பிரகிருதியின் பரப்பு அல்லது சிருஷ்டியே கருமம்—ஆகவே கருமமும் அநாதி—கருமத்தினது அகண்டமான ஆடம்பரம்—பரமேசுவரன் அதன்கண் கையாடாது கருமத்தின்படியே பலனைக் கொடுக்கின்றார் (ப. ௩௬உ)—கருமபந்தத்தின் பிடிப்பும் பிரவிருத்தி சுதந்தரவாதத்தின் பிரஸ்தாவனையும்—கருமவகைபாடு; ஸஞ்சிதம், பிராரப்தம், கிரியமாணம்—'प्रारब्धकर्मणां भोगादेव क्षयः'—மீமாம்ஸகர்களது நைஷ்கர்மியஸித்தி வாதம் வேதாந்திகளுக்கு ஏற்கத்தக்கதன்று—கருமபந்தத்தினின்று ஞானமின்றி விடுதலை இல்லை—ஞானமென்னும் சொல்லின் பொருள்—

ஞானத்தைப் பெறச்செய்துகொள்வற்கு சாரீர ஆத்மா சுதந்
திரமாயுள்ளது (ப. ௩௮௨)—ஆனால் கருமத்தைப் புரிதற்கான
சாதனங்கள் அதனிடத்தில் ஸ்வயமே இராமையால் அவ்வள
வுக்குமட்டிலும் பிறிதுபற்றியது--மோக்ஷமடைதற்காக ஆசரி
துள்ள சொற்ப கருமமும் வீணாகின்றதில்லை—ஆகவே எ
பொழுதேனும் ஓர்ஸமயம் விடாநெடு முயற்சியால் உறுதியான
ஸித்தி—கருமக்ஷயத்தின் ஸ்வரூபம்—கருமங்கள் விடமாட்ட
பலாசையை விடுங்கள்—கருமத்தின் பந்தகத்தன்மை மனதில்
கண்ணுள்ளது கருமத்தின்கண் இல்லை—ஆகவே ஞானம் எ
பொழுது நிகழினும் ஸரி, அதனின்று வரும்பயன் மோக்ஷமே
யாம்—ஆயினும் அதற்குள்ளேயே அந்தகாலத்தின் மகத்துவ
(ப. ௩௯௨)—கருமகாண்டமும் ஞானகாண்டமும்—சிரௌதயஜ்
ஞமும் ஸ்மார்த்தயஜ்ஞமும்—கருமபரமான காருஹஸ்தி
விருத்தி—ஞானத்தோடுகூடியது என்பதும் ஞானமின்றியது
என்பதுமான அதனுடையவே இரண்டு வகைகள்--அதன்படிக்
குள்ள வெவ்வேறு கதிகள்—தேவயானமும் பிதிருயாணமும்—
காலவாசகமா தேவதாவாசகமா—மூன்றாவதான நாககதி—
ஜீவன்முக்த அவஸ்தையின் வர்ணனம்　　ப. ௩௫௨—

ஸ்ரீகணபதி துணை.

ஓம் தத் ஸத்.

ஸ்ரீமத் பகவத்கீதாரஹஸ்யம்

அல்லது

கர்மயோக சாஸ்திரம்.

பிரகரணம் க-வது

விஷயப்பிரவேசம்.

नारायणं नमस्कृत्य नरं चैव नरोत्तमम् ।
देवीं सरस्वतीं व्यासं ततो जयमुदीरयेत् ॥ *

மகாபாரதம், முதற்சுலோகம்.

த் பகவத்கீதையென்பது நமது தர்மநூல்களுள் ஒளிமிகுந்த ஓர்
நிர்மலமான இரத்திநமாம். மறைந்துள்ள சுத்தஆத்மஞாநதத்
களையெல்லாம் பிண்டபிரமாண்டங்களின் ஞாநத்தை முன்
டுச் சொற்பத்திலேயே சந்தேகமற எடுத்துக்கூறி அவற்றின் ஆதா
க்கொண்டு மனிதருக்குத் தத்தம் ஆத்தியாத்மிகபூர்ணவஸ்தை
னும் பரமபுருஷார்த்தத்தையுணர்த்துவதும், அதுவன்றி பக்தியை
தோடும் கடைசியில் அவ்விரண்டையும் சாஸ்திரப்படி கிடைக்கிற
ரங்களோடும் அழகாய்ப்பொருந்த இணைசேர்த்துப் பிரபஞ்சத்
அல்லற்படும் மநத்தைச் சாந்தமும் நிஷ்காமமுமான கர்மாநுஷ்
தில் தூண்டுவதுமாகிய இதுபோன்ற பாலபோதநூல்மற்றொன்று,
கிருதபாஷையில்தானு, உலகில் வழங்குகிற வேறெப்பாஷையிலுங்
கிடைப்பதரிது. கேவலம் ஓர் காவியநிலையில் வைத்து இதைப்
ாதித்தாலும் ஆத்மஞாநத்திய ஆழ்ந்த பல சித்தாந்தங்களை அருள்
னுல் சிறுவர்முதல் கிழவர்வரையில் எவருக்கும் எளிதில் அறிவிப்ப

ஸ்ரீ நாராயணனையும் மனிதருட்சிறந்த நரனையும் ஸரஸ்வதி தேவியையும்
முனிவரையும் நமஸ்கரித்துப் பின்பு ஜயத்தை எனின் மகாபாரதத்தைப்
க் தொடங்கல் வேண்டும்," என்பது இச்சுலோகத்தின் பொருளாம்.

தும், ஞானத்துடன் பக்திரஸம் நிறைந்ததுமான இந்நூல் உத்தமகாரியங்களுள் ஒன்றென மதிக்கத்தகும்; அப்படியிருக்க ஸ்ரீ பகவானது வாய்மொழியில் ஸகல வைதிகதர்மங்களின் ஸாரமுமடங்கிய இதன் பெருமையை வர்ணிக்கவுமியலுமா? பாரதயுத்தம் முடிந்தபின் ஒரு நாள் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனர்கள் நேசமாய்ப்பேசி வீற்றிருக்கையில் பகவானது திருமுகத்தினின்று மீண்டுமொருமுறை கீதையைக் கேட்க விரும்பிய அர்ஜுனன் அவரைநோக்கி "யுத்தாரம்பத்தில் தேவரீர்செய்த உபதேசத்தை யான் மறந்தனன், அதனை அடியேனுக்குத் திரும்பவும் அருளிச் செய்யவேண்டும்." என்று பணிவுடன் கேட்க, அப்போது பகவான் "அவ்வுபதேசம் அச்சமயத்தில் மிக்கயோகத்தினின்ற சித்தத்துடன் செய்யப்பட்டமையின் அதனை மறுபடி அப்படியே பகர்வது எனக்கும் சக்கியமன்று." என்று அவனுக்குப் பதிலுரைத்தாரென்பது அநுகீதையினாரம்பத்திற் கூறியுள்ளது (ம பா. அசு. அ. கசு சு. க0—க...). உண்மையை நோக்கின், பகவானுக்கு அசக்கியமானது ஒன்றுமேயில்லையாயினும் கீதையை மறுபடி சொல்வது சக்கியமில்லையென்று அவர் சொல்லும்படியானதினின்று கீதை இத்தனை மகத்துவமுள்ளதென்பது மாத்திரம் நன்கு தெளிவாகின்றது. சுமார் இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருஷங்களாக இந்நூலை வைதிகதர்மத்திலுள்ள வெவ்வேறு சம்பிரதாயங்களுக்கு வேதத்தைப்போலவே-எல்லாரும் ஒரே விதமாய்ப்-பிரமாணமென்று ஏற்றுக்கொள்ளுவதற்கு இதுவே ஏதுவாயிருப்பதுமன்றி இக்காரணம் பற்றியே—

सर्वोपनिषदो गावो दोग्धा गोपालनन्दनः ।
पार्थो वत्सः सुधीर्भोक्ता दुग्धं गीतामृतं महत् ॥

நரநாராயணர்களென்னுமிருஷிகள் இருவரும் ஈருருக்கொண்ட ஸாக்ஷாத் பரமாத்மாவே என்றும், பின்பு அர்ஜுனனும் ஸ்ரீகிருஷ்ணனுமென்னுமிருவரும் அவர்களுடைய அவதாரங்களே ஆயினர் என்றும் மஹாபாரதத்திற் கூறியுள்ளது (ம. பா. உ. சஅ. எ—கூம் உ0—உஉம்; வந. கஉ. சச—சசு). இவர்களே முதல் நிஷ்காமகர்மபரமான நாராயணீயம் அல்லது பாகவததர்மம் என்பதைப் பு... படுத்தியவராதலின் எல்லாப் பாகவததர்மநூல்களிலும் ஆரம்பத்தில் இவர்களுக்கே நமஸ்காரம் செய்யப்பட்டுவருகிறது. சில இடங்களில் 'व्यासम्' என்னும் சொல்லை நீக்கி 'चैव' என்னும் பாடம் கொடுக்கப்பெற்றிருக்கிற... ஆனால் அப்படிச்செய்திருப்பது சரியென்று எமக்குத் தோன்றவில்லை. ஏனெனில், நரநாராயணஇருஷிகள் பாகவததர்மத்தைப் பிரவர்த்திக்கச் செய்... ரெனினும் இத்தர்ம விஷயமாய்ப் பாரதமும் கீதையுமென்ற இரண்டு முக்கியமான நூல்களையும் இயற்றியருளிய வியாஸபகவானையும் ஆரம்பத்திலே நமஸ்கரித்தல் எமது நோக்கத்தில் யுக்தமாயிருத்தலினென்பது. 'ஜயம்' என்னும் சொல் மஹாபாரதத்திற்குப் பழமையானதோர் பெயராகும் (மபா.அ. கஉ. உ...

பநிடதங்களெல்லாமே பசுக்களும், ஸ்ரீ கண்ணபிரான்தானே பால் றப்போனை (இடையனும்), புத்தியின்மிக்க அர்ஜுநனே (அப் சுக்களுக்குச் சுரப்புண்டாக்கும்) போக்தாவாகிய கன்றும், மேலும் இவ்வித அபூர்வ சாதனங்கள் சேர்ந்தபின்) இப்பெருங் கீதாமிர்தமே ந்த பாலுமாயின,"—என்று இப்படி ஸ்மிருதிகாலத்திய கீதாத்தியாந ரவில் அணிவகையாலென்றாலும் உள்ளபடியே வர்ணிக்கப்பட்டிருக் து. இந்துதேசத்துப் பிராகிருதபாஷைகளிலெல்லாம் இதன் மாழிபெயர்ப்புக்களோ உரைகளோ அன்றி நிரூபணங்களோ பல வளிப்பட்டிருப்பதில் வியப்பொன்றுமில்லை; மேற்றிசையாருக்கு ஸம்ஸ் ருதபாஷை தெரிந்தபின்பு கிரீக்கு, லத்தீந், ஜர்மந், ப்ரெஞ்சு, ஆங் லம் முதலிய அவர்கள்பாஷைகளிலேயும் கீதையின் பல மொழி பர்ப்புக்களாகி இவ்வொப்பற்ற நூல் உலகமெங்குமன்றோ பிரசித்தி ற்றிருக்கிறது!

எல்லா உபநிடதங்களின் ஸாரமுமிந்நூலிற் பொதிந்திருக்கிறதென் துமாத்திரமேயன்று, பின்னையோவெனில் "श्रीमद्भगवद्गीता-उपनिषत्" ர்பதே இதன் முழுப்பெயராகவுமிருக்கிறது. கீதையினது ஒவ்வொரு த்தியாயத்தின் கடைசியிலுமுள்ள அத்தியாயமுற்றுரையிலே "इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे" ன்பதுமுதலிய சொற்கள் உள்ளன. இம்முற்றுரை மூலபாரதத்திற் காடுக்கப்படாவிடினும் கீதைநூலின் பிரதிகளிலெல்லாம் காணக் டெத்தலால் நித்தியபாடத்திற்கென்று மகாபாரதத்தினின்று தனியே கீதை எடுக்கப்பட்டதுமுதல், எனின் கீதையின்மீது எவ்வுரையும் இயற்றப்படுமுன், அது புலப்பட்டிருக்கவேண்டுமென்று அநுமாநமா கிறது. மேலும் இந்நோக்கத்துடன் கீதையின் கருத்தை நிச்சயிப்பதி லுள்ள விசேஷம் இன்னதென்று பின்பு கூறப்படும். தற்காலம் முற்றுரையிலுள்ள "भगवद्गीतासु उपनिषत्सु" என்னுமிரண்டு சொற்களின் விசாரணை அவசியமாகின்றது. 'உபநிஷத்து' என்னும் சொல் தமிழில் ஒன்றன்பாலாயிருப்பினும் வடமொழியில் அது பெண்பாலாயிருப்பத னல் "ஸ்ரீ பகவானால் பாடப்பட்ட எனின் சொல்லப்பட்ட உபநிஷ த்து" என்னும் பொருளிலே வடமொழியில் "श्रीमद्भगवद्गीता उपनिषत्" என்ற விசேஷணவிசேஷியரூபமான இரண்டுசொற்கள் பெண்பாலில் வந் திருக்கின்றன. மேலும் நூல் ஒன்றேயாயினும் மரியாதைப் பொருளில் பன்மையாய்க் குறிக்கும்வழக்குப்பற்றி "श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु" என்று ஏழனுருபேற்ற பன்மையை உபயோகித்திருக்கிறது. ஆசாரியர்களது பாஷ்யத்திலேயும் இவ்வாறே "इति गीतासु" என்று இந்நூலைக்குறித்துப் பன்மைப் பிரயோகங்கள் வந்திருக்கின்றன. ஆனால் சுருக்கிச் சொல்

னும்போது மரியாதைவிகுதிகளை அல்லது சொற்களையும் ...
தன்மையில் வந்த '**उपनिषत्**' என்னும் கடைசிச்சொல்லையும் நீக்கி...
கடம், சாந்தோக்கியம் என்னும் ஸம்க்ஷேபநாமங்களைப்போலவே...
'**भगवद्गीता उपनिषत्**' என்ற இரண்டு முதல்வேற்றுமையொருமை...
களின்வழியே முதலில் '**भगवद्गीता**' என்றும், பிறகு வெறும்...
என்றும் பெண்பாலில் மிகக்குறுகிய ரூபங்களாயிருக்கின்றன. 'उ...
என்ற சொல் மூலத்திய பெயரில் இல்லாதிருப்பின் '**भागवतम्**', '...
'**गोपीगीतम्**' என்பவற்றைப்போல இந்நூலின் பெயரும் '**भग**...
என்ருவது, வெறும் '**गीतम्**' என்ருவது ஓர் அஃறிணைச்சொல்லா...
இருக்கவேண்டும். அப்படியின்றி '**भगवद्गीता**' அல்லது '**गीता**'...
பெண்பாலிலேயே சொல்லமைந்துவிட்டமையால் அதன் பெ...
கிணங்க '**उपनिषत्**' என்ற சொல் நியதமாய் அதன்பின் தொக்கு...
தாக எண்ணவேண்டும். அநுகீதையின்மீது அர்ஜுநமிசிரர் இ...
உரையிலும் '**अनुगीता**' என்னுஞ்சொல்லுக்கு இவ்விதமே பொருள்...
பட்டிருக்கிறது.

ஆனால் 'கீதை' என்ற பெயர் எழுநூறு சுலோகங்களடங்கி...
வத்கீதைக்கேயன்றி ஞாநபரங்களான மற்றும் பல நூல்களுக்கு...
மாய் வந்திருப்பதாகத் தெரியவருகிறது. உதாரணமாக, ம...
தத்தில் சாந்திபர்வத்துள்ளடங்கிய மோக்ஷபர்வத்தின் சில ...
பிரகரணங்களுக்குப் பிங்களகீதை, சம்பாககீதை, மங்கிகீதை, ...
தியகீதை, விசக்கியுகீதை, ஹாரீதகீதை, விருத்திரகீதை, பராச...
ஹம்ஸகீதை என்னும் பெயர்கள் கொடுக்கப்பட்டிருப்பதுடன்...
மேதபர்வத்துளடங்கிய அநுகீதையின் ஒரு பாகத்திற்குப் 'பி...
கீதை' என்று விசேஷமான ஓர் தனிப்பெயருமுள்ளது. இவ...
தவிர அவதூதகீதை, அஷ்டாவக்கிரகீதை, ஈசுவரகீதை, உத்த...
கபிலகீதை, கணேசகீதை, தேவீகீதை, பாண்டவகீதை, பிரம...
பிக்ஷுகீதை, யமகீதை, ராமகீதை, வியாஸகீதை, சிவகீதை, சூ...
சூரியகீதை முதலிய மற்றும் பல கீதைகளும் பிரசித்தமாயு...
இவற்றுள் சில சுதந்திரமாயியற்றப்பெற்றும் மற்றவை பற்பல பு...
களினின்று வரப்பெற்றுமிருக்கின்றன. உதாரணமாக, கணே...
யென்பது கணேசபுராணத்தின் கடைசியில் கிரீடாகண்டத்தின்...
யாயங்கள் ௧௩௮ முதல் ௧௪௮ வரையிலிருப்பதுமன்றிச் சற்றே...
பேதத்துடன் உள்ளதுள்ளபடி அது பகவத்கீதையின் நக...
மென்று கூறத் தடையொன்றுமில்லை. ஈசுவரகீதையென்பது கூ...
ணத்தின் உத்தரபாகத்திலே முதற் பதினோரத்தியாயங்களில் இ...
பின்பு மேலத்தியாயத்திலே வியாஸகீதைக்கு ஆரம்பமாயிருக்...

, ஸ்கந்தபுராணத்திற்குட்பட்ட சூதஸம்ஹிதையினது ச-வதான வைபவகண்டத்தின் மேற்பாகத்து ஆரம்பத்தினத்தியாயங்கள் தல் கஉ வரையில் பிரம்மகீதையும், அதற்கப்பாலுள்ள எட்டு அத் யங்களில் சூதகீதையும் இருக்கின்றன. ஸ்கந்தபுராணத்தி ள இந்தப் பிரம்மகீதைக்குவேருன மற்ருெரு பிரம்மகீதை யோகவா ட்டத்திய நிர்வாணப்பிரகரணத்தின் உத்தரார்த்தத்திலே களகூ முதல் க வரையிலுள்ள சருக்கங்களில் வந்திருக்கிறது. யமகீதையின் கள் மூன்றுள்ளன. அவற்றுள் முதலாவது விஷ்ணுபுராணத்திய மமிசத்தின் எ-வது அத்தியாயத்திலும், இரண்டாவது அக்நிபுரா திய மூன்ரும் கண்டத்தின் கூஅக-வது அத்தியாயத்திலும், மூன்ரு நிருஸிம்மபுராணத்திய அ-வது அத்தியாயத்திலும் வந்திருக்கிறது. கீதையின் வரலாறும் இவ்விதமேயாம். நமது தேசத்திலே பிர த்திலிருக்கிற ராமகீதையென்பது அத்தியாத்மராமாயணத்தின் தரகாண்டத்திய ரு-வது சருக்கத்திலிருப்ப, அவ்வத்தியாத்மராமா ம் பிரம்மாண்டபுராணத்தின் ஓர் பாகமென்று நினைக்கிருர்கள். ல் இதுவன்றி வேருெரு ராமகீதை சென்னையில் பிரசுரித்திருக்கிற ஞானவாஸிஷ்ட-தத்துவஸாராயணம்' என்னும் நூலின்கண் இருக் து. இது ஞானம், உபாஸனை, கர்மம் என்ற மூன்று காண்டங்க ங்கிய ஒரு வேதாந்தநூலாம். இங்கு உபாஸநாகாண்டத்தினது டாம் பாதத்திய முதற் பதினெட்டு அத்தியாயங்களில் ராம யும், மூன்ருவதான கர்மகாண்டத்தின் மூன்ரும் பாதத்திய ஐந்து அத்தியாயங்களில் சூரியகீதையும் வரக்காணலாம். சிவ யென்பது பத்மபுராணத்திய பாதாளகண்டத்திலுள்ளதென்பார் ஆனல் பூநா ஆநந்தாசிரமத்தில் அச்சிட்டிருக்கிற இப்புராணத் பிரதியிலே சிவகீதை காணப்படவில்லை. பண்டித ஜ்வாலாப் தர் என்பவர் கௌடதேசத்துப் பத்மபுராணத்தில் அது அகப்படு ன்று தமது 'அஷ்டாதசபுராணதர்சநம்' என்ற நூலில் எழுதியி ர். நாரதபுராணத்திலே மற்றைப் புராணங்களுடன் பத்ம த்திற்கும் விஷயாநுக்கிரமணிகை கொடுத்திருப்பதில் சிவகீதை கண்டிருக்கிறது. இது நிற்க, ஸ்ரீமத்பாகவதபுராணத்திலே து ஸ்கந்தத்தின் கூ-வது அத்தியாயத்தில் ஹம்ஸகீதையும், உகூ- அத்தியாயத்தில் பிக்ஷுகீதையும் கிடைக்கின்றன. அதுவன்றி, மூன் ஸ்கந்தத்திலுள்ள காபிலேயோபாக்கியாநத்திற்கும் (அ. உகூ—கூகூ) 'கபிலகீதை' என்று பெயரிட்டிருக்கின்றனர். ஆனல் எமது பார் யில் 'கபிலகீதை' என்னும் அச்சிற்பதித்த சுதந்தரமான புத்தக ன்றுள்ளது. இக் கபிலகீதை முக்கியமாய் ஹடயோகத்தை ர்த்துவதுமன்றி, தன்னைப் பத்மபுராணத்திற் கூறியுள்ளதாக இத

னுள் கண்டிருக்கிறது. பத்மபுராணத்திலே இது கிடைக்கிறதில்லையென்பதுமாத்திரமேயன்று; பின்னேயோ, இதன்கண் ஓரிடத்திலே (சு. எ) ஜைநர், சங்கமர் (லிங்கங்கட்டிகள்,) ஸோபீ (முஸல்மாந் ஸாது) என்னுமிவர்களைப்பற்றியும் பேசியிருப்பதால் மகம்மதியர் தோன்றியபிறகே இக்கீதை வெளிப்பட்டதொன்றென்று சொல்லவேண்டும். பாகவதபுராணத்திற்போலவே தேவீபாகவதத்திலும் எ-வது ஸ்கந்தத்தின் கூக-வதுமுதல் சo-வதுஅத்தியாயம்வரையில் கீதையொன்றுள்ளது. அதைத் தேவியார் கூறினமையால் அதற்குத் 'தேவீகீதை' என்று பெயராம். இது நிற்க, கேவலம் பகவத்கீதையின் ஸாரத்தையே அக்நிபுராணத்திய கூ-வது கண்டத்தின் கூஅo-வது அத்தியாயத்திலும், கருடபுராணத்திய பூர்வகண்டத்தின் உசஉ-வது அத்தியாயத்திலும் கொடுத்திருக்கிறது. மேலும் யோகவாஸிஷ்டம் என்ற நூல் ராமனுக்கு வஸிஷ்டர் உபதேசித்தது என்பாராயினும், கிருஷ்ணவதாரத்திலே பகவான் அர்ஜுநனுக்குரைத்த பகவத்கீதையின் ஸாரமானது அதிற்கண்ட பல சுலோகங்களை அப்படியே எடுத்துக்கொண்டு 'அர்ஜுநோபாக்கியாநம்' என்ற பெயருடன் அதிலே கடைசியதான நிர்வாணப்பிரகரணத்தின்கண் சேர்க்கப்பட்டுள்ளது (யோக. சூ பூ. ச. ருஉ—ருஅ பார்க்க). பூநாவிலே அச்சிடப்பட்ட பத்மபுராணத்தில் சிவகீதை அகப்படுகிறதில்லையென்று மேலே சொன்னோம். அந்தப் பிரதியில் அது அகப்படாவிடினும் அதன் உத்தரகண்டத்திலே களக முதல் கஅஅ வரையிலுள்ள அத்தியாயங்களில் பகவத்கீதாமாகாத்மியம் கூறப்பட்டிருப்பதுமன்றி, பகவத்கீதையினது ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் இம்மாகாத்மியத்தின் ஒவ்வொரு அத்தியாயம் அதில் சொடுக்கப்பட்டும் ஆங்காங்கு அதுசம்பந்தமான கதைகள் வரப்பெற்றுமிருக்கிறது. இது தவிர வராகபுராணத்திலே ஓர் கீதாமாகாத்மியமும் சைவ- அல்லது வாயு-புராணத்திலே மூன்றுவதோர் மாகாத்மியமும் உள்ளன என்கிறார்கள். ஆனால் கல்கத்தாவில் அச்சிடப்பட்ட வாயுபுராணத்திலே அது எமக்குக் கிடைக்கவில்லை. 'கீதாத்தியாநம்' என்ற கூ சுலோகங்களடங்கிய பிரகரணமொன்று பகவத்கீதையின் அச்சுப்பிரதிகளில் முதலிலே கொடுக்கப்பட்டு வருகிறது. அது எங்கிருந்து எடுத்ததெனத் தெரியவில்லை. ஆயினும் இப்போது வெளிப்பட்டிருக்கிற 'ஊருபங்கம்' என்னும் பாஸகவியியற்றிய நாடகத்தின் ஆரம்பத்திலேயே '**भीष्मद्रोणतटा जयद्रथजला—**' என்ற அதன் சுலோகமொன்று சிறிது சொற்பேதத்துடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் தியாநம் வெகுவாய்ப் பாஸகவியின் காலத்திற்குப்பின்னர் புலப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. காரணம் யாதெனில், பாஸரைப்போல பேர்போன கவியொருவர் இச்சுலோகத்தைக் கீதாத்தியாநத்தினின்று எடுத்துக்கொண்டாரென்றெண்ணுவதைவிட கீதாத்தியாநமே

ஆங்காங்குள்ளனவும் சில புதியனவுமான சுலோகங்களாலமைக்கப்பெற்றதென்று சொல்லுவதில் மிகப்பொருத்தமுள்ளதென்பதாம். பாஸவியென்பவர் காளிதாஸருக்கு முற்காலத்தியவராதலின் அவரது காலம் டைசிபக்ஷம் சகம் ௲௦௦-க்கு அதிகமாய்ப் பின்னிட்டிருக்க முடியாது.*

மேற்கண்ட வரலாற்றினின்று, பகவத்கீதையின்மீது மொழிபயர்ப்புக்களோ ஸம்பூர்ண-அஸம்பூர்ணப்பிரதிகளோ தாத்பரியங்களோ அன்றி மாகாத்மியங்களோ புராணங்களிலிருந்து இன்ன இன்ன இத்தனை இத்தனை தெரியவருகின்றனவென்பது புலப்படும். அவதூதம், அஷ்டாவக்கிரம் முதலிய சில கீதைகள் இன்ன புராணங்களிலேயுள்ளனவென்றோ, அங்கில்லையெனில் அவை தனியாய் இன்னசமயம் இன்னாரால் இயற்றப்பட்டனவென்றோ எவ்விதத் தகவலும் கிடைக்வில்லை. ஆயினும் இவ்வெல்லாக் கீதைகளின் சொன்னடையையேனும் விஷயஒற்றுமையையேனும் உற்றுநோக்குங்கால், இவையெல்லாம் பகவத்கீதை வெளிப்பட்டு லோகஸம்மதமானபிறகுதான் இயற்றப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. சுருங்கச்சொல்லின், பகவத்கீதையைப்போன்றதொன்று நமது விசிஷ்டஸமயமார்க்கங்களிலும் புராணங்களிலும் இருந்தாலன்றி அவை பூர்த்தியாகாவாமென்ற இக்கருத்துக்கொண்டே இப்படிப் பற்பல கீதைகளுண்டாக்கப்பெற்றன எனலாம். பகவத்கீதையில் பகவான் தன் விசுவரூபத்தைக்காட்டி அர்ஜுனனுக்கு ஞானத்தையுபதேசித்ததுபோலவே சிவகீதை, தேவீகீதை, கணேசகீதையென்னுமிவற்றுள்ளும் வர்ணித்திருக்கிறது. அன்றியும் சிவகீதை, ஈசுவரகீதை முதலியவற்றின் இடையில் வேண்டிய சுலோகங்கள் பகவத்கீதையினின்று எழுத்தெழுத்தாய் வந்திருக்கின்றன. ஞானமுறைமையில் நோக்கினும் இக்கீதைகளில் பகவத்கீதையைவிட விசேஷமொன்றுமில்லை; அன்றியும், அத்தியாத்மஞானத்தையும் கர்மத்தையும் பகவத்கீதையில் அபூர்வமாய் இணைசேர்த்திருப்பதுபோன்றதெதுவும் அக்கீதைகளொன்றிலுமே புலப்படவில்லை. பகவத்கீதையில் பாதஞ்சலயோகம், ஹடயோகம், கர்மத்தியாகரூபமான சந்நியாஸம் என்பவற்றின் வர்ணனம் ஏற்றபடி வரவில்லையென்றெண்ணி யாரோ ஒருவர் பகவத்கீதைக்கு அநுபந்தமெனக்கொண்டு கிருஷ்ணார்ஜுனஸம்வாதரூபமாய் உத்தரகீதையென்னுமொன்றைப் பின்பு இயற்றியிருக்கிறார். மேலும் அவதூதம், அஷ்டாவக்கிரம் முதலிய கீதைகள் கேவலம் ஏகதேசீயமான சந்நியாஸமார்க்கத்தையே எடுத்துக்காட்டுவனவாக, யம

---

*மேற்கூறியவற்றுள் பலவும், இன்னும் வேறு சிலவுமான கீதைகளை (பகவத்கீதையுடன்) ரா.ரா.ஸ்ரீ. ஹரி ரகுநாதபாகவதர் இப்போது பூனாவில் அச்சிட்டு வருகின்றார்.

கீதை, பாண்டவகீதை முதலிய வேறு சில கீதைகள் ஸ்தோத்
போல மிகச்சுருக்கமாயும் பக்திபரமாயுமிருக்கின்றன. சிவகீதை
சகீதை, சூரியகீதை என்னுமிவற்றின் நடை அப்படியின்றி அ
ஞானகர்மங்களின் சேர்க்கை ஸயுக்திகமாய்ச் சாதிக்கப்பட்டி
உண்மையே; ஆகிலும் அவற்றினது விஷயப்பிரதிபாதநம் வெ
பகவத்கீதையினின்றே எடுத்தாளப்பட்டிருத்தலால் அங்கு ய
புதுமையும் காணக்கிடைக்காது. ஆகவே முடிவில் பகவத்கீ
வியாபகமான ஆழ்ந்த பேரொளிக்குமுன் பிந்திப் புராணங்கள்
மழுங்கிய கீதைகளுக்கு நிற்க நிலையின்றி இப்போலிக்கீதைகள்
வத்கீதையின்பெருமையே மிகத்தெளிவாய் ஸ்திரமாக்கப்பட்ட
'கீதை' என்னுஞ்சொல்லும் சிறப்புநோக்கிப் 'பகவத்கீதை' என்
ளில் ரூடமாய்விட்டது. அத்தியாத்மராமாயணம், யோகவா
என்னும் நூல்கள் விரிந்து கிடப்பினும் அவைகள் பிந்திய
யென்று அவற்றின் சொற்போக்கினின்று வெளியாகிறது
னையிற் கண்ட 'குருஞானவாஸிஷ்ட-தத்துவஸாராயணம்'
நூல் மிகப்பூர்வீகமெனச் சிலர் நினைத்தாலும் அது எமக்கு
டன்று; ஏனெனில், எல்லாம் பிராசீநமே என்று எண்ணமுடிய
றெட்டு உபநிஷத்துக்களை அதில் எடுத்துக்கூறியிருத்தல
மேலும் சூரியகீதையைப் பார்த்தால் அதில் விசிஷ்டாத்வைதப
உல்லேகம் காணப்படுகிறது (௩. ௩௦), அன்றிச் சிலவிடங்களில்
கீதையினின்றே கோடிக்கிரமங்களும் எடுத்திருப்பதுபோலத்
கிறது (௧. ௬அ); ஆகவே இந்நூலும் மிகவும் பிந்தி-அதிகமில்லா
ஸ்ரீ சங்கராசாரியருக்கும் பிந்தி-உண்டாயிருக்கவேண்டுமென்று
வமையும்.

கீதைகள் பல இருப்பினும் பகவத்கீதைக்கு விவாதமின்றி
மகத்துவமிருப்பதனால் மற்ற கீதைகளிலே அதிக லக்ஷியங்
பகவத்கீதையைப் பரிசோதித்து அதன் தாத்பரியத்தை நமது
னருக்கு எடுத்துரைத்தே தாம் கிருதார்த்தராவதாகப் பிற
வைதிகதர்மபண்டிதர்கள் எண்ணத்தொடங்கினர். நூற்பரி
யென்பது அந்தரங்கபரீக்ஷணம் (எனின் அகப்பரிசோதனை),
பரீக்ஷணம் (எனின் புறப்பரிசோதனை) என இருவகையாம்.
நூல்முழுதையும் பார்த்து அதிலுள்ள மர்மங்களையும், ரகசிய
கடைந்தெடுத்த பொருள்களையும் அல்லது பிரமேயங்களையும்
ரைப்பது அகப்பரிசோதனையெனப்படும். எடுத்துக்கொண்
எங்கே எவராலியற்றப்பட்டது, அதன் பாஷை எப்படிப்பட்ட
திருஷ்டியிலே அதனிடத்து மதுரரஸம் அல்லது பிரஸாதமென்
எத்துணை அடங்கியுள்ளது, அந்நூலின் பதப்பிரயோகங்கள்

யிருக்கின்றனவா அல்லது ஏதோ சில பழைய ஆர்ஷப்பிரயோ அதில் உள்ளனவா என்பதும், எந்த எந்த மதங்களின் ஸ்தலங் ல்லது வியக்திகள் அதில் எடுத்திருக்கின்றனவென்பதும், அத நூலினது காலத்தை நிச்சயிப்பதற்கும் அக்காலத்திய ஸமாஜ யைத் தெரிந்துகொள்வதற்கும் சாதநம் கிடைக்கிறதோ இல் , நூலிலுள்ள ஆராய்ச்சிகள் தந்தரமானவைகளோ அல்லது இடத்தினின்று எடுக்கப்பட்டனவோ என்பதும், பிற இடத்தியனவா வை எங்கிருந்தென்பதும் முதலிய வெறும் புற அங்கங்களின் ச்சியைப் 'புறப்பரிசோதனை' யென்பர். கீதைமீது பாஷ்யங் யோ அன்றி உரைகளையோ இயற்றியிருக்கிற பழைய டீகாகர்கள் ான இவ்விஷயங்களைப் பொருட்படுத்துவதில்லை. ...னில், கீதைபோன்ற லோகோத்தரமான ஒரு நூலைப் பரீக்ஷிக இவ்வித விஷயங்களைக் கவனிப்பது, ஒரு சமயம் சிறந்த மல று எதிர்ப்பட்டபோது அதன் நறுமணத்தையும் நிறத்தையும் கையும் பாராட்டாமல் அதன் இதழ்களைக் கணக்கிடுவதிலும், அல் தேன் நிறைந்த அடையொன்று கையிற் கிட்டியிருக்கும்போது அதி ள் அறைகளைப்பற்றிச் சர்ச்சைசெய்வதிலும் பொழுதுபோக்குவது லாமென்பது அவர்களது அபிப்பிராயமென்க. ஆயினும் மேற் யாரையநுசரித்துத் தற்காலத்திய வித்வான்கள் கீதையின் வெளி த்தைப்பற்றியும் இப்போது வேண்டிய ஆராய்ச்சி செய்துவருகின் . கீதையிலே எத்தனையோ ஆர்ஷப்பிரயோகங்களிருப்பதைக் ண்டு இந்நூல் கிறிஸ்து பிறக்கச் சில நூற்றாண்டுகளுக்காவது னே இயற்றப்பட்டிருக்கவேண்டுமென்றும், ஆகவே கீதையி ள பக்திமார்க்கம் அதற்குப்பிந்திய கிறிஸ்துமதத்தினின்று எடுத்துக் ள்ளப்பட்டதென்ற சங்கையே ஆதாரமற்றதென்றும் ஒருவர் நிச்ச கின்றார். இன்னமொருவர், கீதையின் கரு-வது அத்தியாயத்திற்கண்ட திகமதத்தின் உல்லேகமானது வெகுவாய்ப் பௌத்தமதத்திய னலாமென்று கற்பித்துப் புத்தருக்குப்பிந்தியே கீதையுண்டாயிருக்க ண்டுமென்கிறார். இதன் கரு-வது அத்தியாயத்திலே 'ब्रह्मसूत्रपदैश्चैव-' னும் சுலோகத்தில் பிரம்மசூத்திரங்களைக் கண்டிருப்பதனால் அப் ம்மசூத்திரங்களுக்குப் பிறகுதான் கீதை வந்திருக்கவேண்டுமென்பர் ஒருவர். இதற்கு மாறாக, பிரம்மசூத்திரங்களின் சிற்சில இடங்க லாவது ஸம்சயமின்றிக் கீதையின் ஆதாரம் கொள்ளப்பட்டிருத்தலின், தை அவற்றிற்குப் பிந்தியதென்று எண்ணமுடியாதெனச் சிலர் சொல் துமுண்டு. மற்றும் சிலரோ,—பாரதயுத்தத்திலே போர்க்களத்தின் ன் எ00 சுலோகங்களடங்கிய கீதையை அர்ஜுனனுக்குச் சொல்ல அவ சங்கிடைப்பது சக்கியமன்று; சண்டையவஸரத்தில் ஜர்தோ அதிக

மாயென்றால் ஐம்பதோ முக்கியமான சுலோகங்களையேனும் அவற்றின் பொருளையேனும் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்குக் கூறியிருக்கவேண்டும்; இக்கதையை ஸஞ்சயன் திருதராஷ்டிரருக்கும், வியாஸர் சுகருக்கும், வைசம்பாயனர் ஜநமேஜயனுக்கும், பிறகு ஸூதர் சௌநகருக்கும் சொல்லும்பொழுதும், கடைசியில் மூலபாரதத்தை 'மகாபாரத'மாக ஒருவர் செய்தபொழுதும் அது விஸ்தரிக்கப்பட்டிருக்கவேண்டும்; இப்படிக் கீதைநூலின் வரலாற்றை மநதிற்குக் கொண்டுவந்தபிறகு கீதா சுமுத்திரத்திலே மூழ்கிமூழ்கிச் சிலர் எ-ம்* என்றால் சிலர் உஅ-ம் சிலர் ௱௬-ம் சிலர் க00-ம் ஆக இப்படிக் கீதையின் மூலசுலோகங்களைத் தேடியெடுத்திருக்கின்றனர்.—என்று கூறுவர்! கடைசியில் சிலருடைய போக்கில், கீதையிலுள்ள பிரம்மஞானத்தைப் போர்க்களத்திலே அர்ஜுனனுக்கு உரைப்பதில் பயனொன்றுமேயின்மையால் வேதாந்தபரமான இச் சிறந்தநூலைப் பிந்தி எவரோ மகாபாரதத்தினுள் செருகியிருக்க வேண்டுமென்று இத்தனைதூரம் போயிருக்கிறது. பகிரங்கபரீக்ஷண்ணிய இவ்வித ஆராய்ச்சிகள் முற்றிலும் உபயோகமற்றவை என்பதற்கில்லை. உதாரணமாக, மேற்சொல்லிய புஷ்பஇதழ்களின் அல்லது தேனடையறைகளின் சங்கதியை எடுத்துக்கொள்ளுங்கள். வநஸ்பதிகளை வகைப்படுத்தும்போது அவற்றின் புஷ்பஇதழ்களைப் பற்றியும் விசாரிக்கவேண்டியதவசியமாகிறது. அப்படியே தேனினது (கந) அளவு குறைவுபடாமல் சுற்றுச் சுவர்களின் (அகல)அளவு மிக்க லகுவாய் எனின் மிகக் குறைந்து, மெழுகும் மிகச் சிக்கனமாய்ச் செலவாகும்படி உருவமைந்த தேனறைகள் அக்கூட்டிலுள்ளனவென்றும், அதனின்று தேனீயினது உடலில் இயற்கையாயுள்ள சாமர்த்தியம் வெளிப்படுமென்றும் இப்போதைய கணிதத்தால் சித்தமாயிருக்கிறது. ஆகையால் இவ்வித உபயோகங்களைக் கவனித்துக் கீதையின் பகிரங்கபரீக்ஷைகளுள் அரியபெரிய சிலவிசாரங்களை இந்நூலின் கடையிற் கண்ட பரிசிஷ்டத்தில் யாமும் செய்திருக்கிறோம். ஆனாலும் ஒரு நூலின் ரகசியத்தையறியவிரும்புவோர் இந்தப் பகிரங்கபரீக்ஷகர்களுடைய சங்

*இப்பொழுது ஸப்தசுலோகிகீதை ஒன்று பிரசித்தமாயிருக்கின்றது. அதன்கண் (க) ओमित्येकाक्षरं ब्रह्म इ० (கீ. அ. கங); (உ) स्थाने हृषीकेश तव प्रकीर्त्या इ० (கீ. கக. ௱௬); (ங) सर्वतःपाणिपादं तत् इ० (கீ. கங. கங); (ச) कविं पुराणमनुशासितारम् इ० (கீ. அ. கூ); (ரு) ऊर्ध्वमूलमधःशाखम् इ० (கீ. கரு. க); (சா) सर्वस्य चाहं हृदि संनिविष्टः इ० (கீ. கரு. கரு); (எ) मन्मना भव मद्भक्तः इ० (கீ. கஅ. சாரு) என்னும் இத்தனை சுலோகங்கள்தாம் கொடுக்கப்பட்டுள்ளன. இம்மாதிரியாகவே பகவத்கீதையின் வேறு சில ஸம்க்ஷேபங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

தடியில் அகப்படுவதிலே யாதொரு பயனுமில்லை. ஸரஸ்வதியின் ரகசியத்தையறிபவர்களுக்கும் வெளிக்குமட்டில் அவளைச் சேவிப்பவர்களுக்கும் உள்ள பேதத்தைக் காட்ட முராரியென்னுங் கவிஞர் ஓர் ஸரஸமான திருஷ்டாந்தத்தைக் கொடுத்திருக்கின்றார். அவர் கூறுவது—

अब्धिर्लङ्घित एव वानरभटैः किं त्वस्य गम्भीरता-
मापातालनिमग्नपीवरतनुर्जानाति मन्थाचलः ॥

கடலின் ஆழத்தை அறியவேண்டுமெனில் அதைப்பற்றி யாரை விசாரிப்பது? ராமராவணர்களின் யுத்தகாலத்தில் பெரிய பெரிய பராக்கிரமிகளும் சபலசீலருமான வாநரவீரர்கள் சரேலென்று கடலைத் தாண்டி இலங்கைக்குள் புகுந்தாரென்பது உண்மையே; ஆயினும் கம்பீரமான கடலின் ஆழம் அவ்வெளியவர்களுக்கு எங்கிருந்து தெரியப்போகிறது? சமுத்திரத்தைக் கடைந்த காலத்திலே தேவர்கள் தன்னை மத்தாகக் கொண்டு அதனடித்தரைக்கு விடுக்கப் பாதாளத்தைப்போய்மோதிய மந்தரமலைக்கேயன்றோ அவ்விஷயத்தினுண்மை தெரியக்கூடும்,—என்பதாம். இந்த முராரிகவியின் நியாயப்படி, கீதையின் ரகசியத்தைக் கண்டறிவதற்கு, பல பண்டிதர்களும் ஆசாரியர்களும் கீதையென்னுங் கடலைக் கடைந்தெடுத்தெழுதிய நூல்களின் பக்கமே நாம் திரும்பவேண்டும். இப்பண்டிதர்களுள் மகாபாரத நூலாசிரியரே முக்கியமானவர். சுருங்கச்சொல்லின், தற்காலத்திய கீதையை இயற்றியவர் ஒருவகையில் அவரேயென்றாலுந் தகும். ஆகவே ஸ்வயம் மகாபாரத ஆசிரியரது அபிப்பிராயப்படி கீதையின் தாத்பரியம் எது என்பதை முதலிற் சிறிது கூறுவோம்.

'பகவத்கீதை' அல்லது 'பகவான் பாடிய உபநிஷத்து' என்னுமிப் பெயரினின்றே கீதையில் அர்ஜுனனுக்குச்செய்த உபதேசமானது முக்கியமாய்ப் பாகவத—எனின் பகவான் புலப்படுத்திய—தர்மத்தைப் பற்றியதாயிருக்கவேண்டுமென்று தெரியவருகிறது. ஏனெனில், கண்ணபிரானுக்கு 'ஸ்ரீபகவான்' என்னும் பெயரைப் பெரும்பாலும் பாகவததர்மத்திலேயே கொடுத்துவருகிறார்கள். இவ்வுபதேசம் புதிதல்லவென்றும், முந்தி இதே உபதேசத்தைப் பகவான் விவஸ்வானுக்கும், விவஸ்வான் மநுவுக்கும், மநு இக்ஷ்வாகுவுக்கும் செய்திருக்கின்றனரென்றும் கீதையின் ச-வது அத்தியாயத்தின் ஆரம்பத்திலேயே (கீ. ச. க—ரு) கண்டிருக்கிறது; அதுவன்றி மகாபாரதத்திலே சாந்திபர்வத்தின் கடைசியிலுள்ள நாராயணீய- அல்லது பாகவத-தர்மத்தின் விரிவான நிரூபணத்தில், பிரம்மதேவனுடைய வெவ்வேறு ஜந்மங்களில் எனின் கற்பாந்தரங்களில் பாகவததர்மத்தின் பரம்பரை இன்னதாமென்று வர்ணித்தபிறகு, கடைசியில் பிரம்மதேவருடைய தற்காலஜந்மத்திய திரேதாயுகத்திலே—

त्रेतायुगादौ च ततो विवस्वान्मनवे ददौ ।

मनुश्च लोकभृत्यर्थं सुतायेक्ष्वाकवे ददौ ।
इक्ष्वाकुणा च कथितो व्याप्य लोकानवस्थितः ॥

"இந்தப் பாகவததர்மமானது விவஸ்வான்-மநு-இக்ஷ்வாகுவென்னுமிப் பரம்பரைவாயிலாய்ப் பரவியுள்ளது" என்று கூறியிருக்கிறது (ம பா. சா. ௩௪அ-௫௧, ௫௨). இவ்விரண்டு பரம்பரைகளும் ஒன்றோடொன்று பொருந்துகின்றன(கீதை ௪. ௧ இன்மீது எமது உரையைப் பார்க்க). அன்றியும், வேறான இரண்டு தர்மங்களின் பரம்பரை ஒன்றாகவேயிருக்க இயலாது; ஆகவே கீதாதர்மமும் பாகவததர்மமும் ஒன்றாகவேயிருக்க வேண்டுமென்று இப்பரம்பரையைக்கியத்தினின்று சகஜமாய் அநுமான மாகிறது. ஆனால் இவ்விஷயம் கேவலம் அநுமானத்தையே சார்ந்திருக் கிறதென்றில்லை. ஏனெனில், மகாபாரதத்தில் நிரூபித்திருக்கிற இந்த நாராயணீய- அல்லது பாகவத-தர்மத்திலேயே—

एवमेष महान्धर्मः स ते पूर्वं नृपोत्तम ।
कथितो हरिगीतासु समासविधिकल्पितः ॥

"ஓ அரசரேறே ஜநமேஜய! இப்பெரும் பாகவததர்மமே உள்ளுறை விதிகளுடன் எல்லாம் சுருக்கமாய் மேலேகண்ட ஹரிகீதையில் எனின் பகவத்கீதையில் முந்தி உனக்கு உரைக்கப்பட்டிருக்கிறது" (ம பா. சா. ௩௪௬. ௧0),—என்று வைசம்பாயநர் ஜநமேஜயனுக்குக் கீதையின் தாத்பரியத்தை வர்ணித்திருக்கிறார். மேலும் ஒரு அத்தியாயம் விட்டு அடுத்த அத்தியாயத்திலே நாராயணீயதர்மத்திய இவ்விவரத்தை—

समुपोढेष्वनीकेषु कुरुपाण्डवयोर्मृधे ।
अर्जुने विमनस्के च गीता भगवता स्वयम् ॥

"குருபாண்டவயுத்தத்தில் இரண்டு சேனைகளும் தயாராய்நிற்கும்போது அர்ஜுனன் விமநஸ்கனாகவே எனின் துயரமுறவே, அவனுக்கு ஸ்வயம் பகவானேயுரைத்துள்ளார்" (ம பா. சா. ௩௪அ. அ),—என்று தெளிவா யெடுத்துக் கூறியிருக்கிறது. ஆகவே இங்கு 'ஹரிகீதை' என்ற சொல் பகவத்கீதையையே குறிக்குமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. குருபரம்பரை ஒன்றாகவேயிருப்பதுமன்றிக் கீதை நுதலியபொருளென்று வியக்தமாய் இரண்டுதரம் எடுத்துக்காட்டிய இந்தப் பாகவத- அல்லது நாராயணீய-தர்மத்திற்கே 'ஸாத்துவததர்மம்' 'ஐகாந்திகதர்மம்' என்ற வேறு பெயர்களுமுள்ளன. மேலும் அதை நிரூபித்துவருகையில்—

नारायणपरो धर्मः पुनरावृत्तिदुर्लभः ।
प्रवृत्तिलक्षणश्चैव धर्मो नारायणात्मकः ॥

"இந்த நாராயணீயதர்மமானது புநர்ஜந்மத்தைத் தொலைப்பது எனின் பூர்ணமான மோக்ஷத்தைக்கொடுப்பதும் பிரவிருத்திபரமுமாயிருக்கின் றது,"—என்றிப்படி அதன் சரியலிலக்கணத்தைத் தந்து (சா. ௩௪எ. அ0,

அக), பிறகு இந்த தர்மம் பிரவிருத்திபரமாகும் விவரத்தையும் பூர்ணமாய் மகாபாரதத்திலே கொடுத்திருக்கிறது. பிரவிருத்தியென்பதற்குச் சந்நியாஸம்வாங்காமல் மரணபரியந்தமும் நாலுவர்ணங்களுக்கும் விதித்த நிஷ்காமகர்மத்தையே செய்துகொண்டிருத்தலென்னும் இப்பொருள் பிரசித்தமானது. ஆகவே கீதையில் அர்ஜுனனுக்குச் செய்த உபதேசம் பாகவததர்மத்தியது என்பதும், அந்த தர்மம் பிரவிருத்திபரமாயிருப்பதனால் அவ்வுபதேசமும் பிரவிருத்திபரமேயாமென்று மகாபாரத நூலுடையார் நினைக்கின்றார் என்பதும் வெளிப்படுகிறது. ஆகிலும் பிரவிருத்திபரமான பாகவததர்மமொன்றே கீதையிலுள்ளதென்பதற்கு மிடமில்லை; பின்னையோவெனில், இப்பாகவததர்மமும்—

यतीनां चापि यो धर्मः स ते पूर्वं नृपोत्तम ।
कथितो हरिगीतासु समासविधिकल्पितः ॥

"அதனோடே [चापि] யதிகளுடைய எனின் சந்நியாஸிகளுடைய நிவிருத்திப்ரமான தர்மமும், ஓ அரசே! முன்னமே உனக்குப் பகவத் கீதையிலே விதிகளுடன் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது,"— என்று வைசம்பாயநர் ஜநமேஜயனுக்குப் பின்னுமொருகால் கூறியுள்ளார் (ம பா. சா. ங௪அ. ருங). ஆனால், பிரவிருத்திதர்மத்தோடுகூடவே நிவிருத்திபரமான யதிதர்மமும் இவ்விதம் கீதையிலுரைக்கப்பட்டிருந்தாலும் அதிற்கண்ட மநு-இக்ஷ்வாகுமுதலிய கீதாதர்மத்தின் பரம்பரையானது யதிதர்மத்திற்குக் கொஞ்சமேனும் பொருந்தாது கேவலம் பாகவத தர்மத்தினது பரம்பரைக்குமாத்திரமே பொருந்துகின்றது. ஆகவே கீதையிலே அர்ஜுனனுக்குச் செய்த உபதேசம் முக்கியமாய் மநு-இக்ஷ்வாகுமுதலிய பரம்பரையில் பயின்றுவந்த பிரவிருத்திபரமான பாகவத தர்மத்தைச் சார்ந்ததாக இருப்பதுடன், அதை ஒட்டியே நிவிருத்திபரமான யதிதர்மத்தையும் அங்கு நிரூபித்திருக்கிறதென்பதே மகாபாரத நூலாரது அபிப்பிராயமென மேற்கண்ட வாக்கியங்களெல்லாவற்றினின்றும் முடிவாகின்றது. மகாபாரதத்திலுள்ள பிரவிருத்திபரமான இந்த நாராயணீயதர்மமும், பாகவதபுராணத்திலுள்ள பாகவததர்மமும் மூலத்தில் ஒன்றேயாவனவென்று பிருது, பிரியவிரதன், பிரகலாதன் முதலிய பகவத்பக்தர்களுடைய கதைகளினின்றும், அன்றிப் பாகவதத்தினுள் மற்றவிடங்களிற்கண்ட நிஷ்காமகர்மத்திய வர்ணனங்களினின்றும் தேறத்தெளியலாகும் (பாக. ச. உஉ. ருக; ருஉ; எ. க0. உங-ம் கக. ச. ஙு-ம் பார்க்க). ஆனாலும் பாகவததர்மத்திலுள்ள கர்மபரமான பிரவிருத்திதத்துவத்தை ஸ்தாபிப்பதிலே பாகவதபுராணத்திற்கு முக்கிய உத்தேசமென்றில்லை. அந்த ஸ்தாபநம் மகாபாரதத்திலே, அதிலும் விசேஷமாய்க் கீதையிலேயே செய்யப்பட்டுள்ளது. இதுவன்றி, இந்த ஸ்தாபநத்துடன் பாகவததர்மத்திலுள்ள பக்தியின் ரகசியங்களைக் காட்